விடுதலைப்புலிகள்

குரல்: 82 சித்திரை - 1998 அன்பளிப்பு: 5/=

உள்ளே


- சந்திரிகா அரசின் இராணுவநலனும் தமிழ்மக்களின் அவல வாழ்வும்
- தாயக மீட்புப் போரும் உலகத் தமிழரின் பங்கும்
- கழுகு தரையிறங்குகின்றது
- விலைபோகும் தேசியப்பெருமை
- ஒரு நொடிப்பொழுது
- தெருவெளி அரங்கம்
- உலைக்களம்


# ஜயசிக்குறுவின் தலைவிதியை எழுதுமுனையும் மாங்குளம் சண்டைகள்

மூன்றாம் ஈழப்போரின் மூன்றாம் ஆண்டு நிறைவுநாளுக்கு அடுத்தநாள் மாங்குளத்தைப் பிடித்துவிட படைத்தலைமை பாரியதொரு தாக்குதல் முயற்சியை தொடுத்திருந்தது. ஒலுமடு-மாங்குளம் – மூன்றுமுறிப்புச்சந்தி— என மூன்று சண்டைமுனைகளைத் திறந்து மாங்குளத்தைத் தாக்கியது.

படையினரின் சர்தாரணைநகர்விற்கு புலிகளின் எறிகணைகள் பெருந்தீங்கிழைத்ததால், இம்முறை, கவசப்படையைப் பயன்படுத்தி தற்காத்தபடி தாக்குதலைநடாத்த படைத்தலைமை முயன்றது. அத்துடன், புலிகள் அமைத்துவைத்திருக்கும், பலமான காப்பரண்களை உடைத்து - உட்புக வசதியாக தனது கவசப்படை உதவும் என அது கருதியது.

20ம் திகதி (20 . 04 . 98) காலை 6.00 மணியளவில் படையினரின் 10ற்கும் மேற்பட்ட ராங்க்குகள், துருப்புக்காவிகள் என்பன – இருபகுதிப் படைகளுக்கும் இடையே இருந்த சூனியப்பகுதியை ஊடறுத்தவாறு - முன்னேறமுயன்றன. ராங்க்குப் படையின் நகர்விற்கு பக்கத்துணையாக எதிரியின் எறிகணைமழை வலுவூட்டியது.

புலிகளின் 'எதிர்த்தாக்குதலுக்கு மத்தியில் முன்னேறிச்சென்று புலிகளின் முன்னணி அரண்களில் ஒருசிலவற்றையாவது கைப்பற்றி – அதன் பின்னர் – கைப்பற்றப்பட்ட அரண்களை பயன்படுத்தி புலிகளின் ஏனைய காப்பரண்களையும் தாக்கி – வீழ்த்தி மாங்குளத்தைக் கைப்பற்ற படையினர் முயன்றனர்.

கவசப்பாதுகாப்பையும் – படைக்கலசக்திப் பலத்தைப் பயன்படுத்தியும், பகைவன் இந்தத் திடீர்த்தாக்குதலைச் செய்தான். புலிகளின் காப்பரண்களுக்கு மிக அருகுவரை பகைவனின் கவசவாகனங்கள் புகுந்தன. புலிகளின் ஆண் போராளிகளும் – பெண்போராளிகளும் இணைந்து எடுத்த, போர்த்திறனும் – துணிவும் மிக்க எதிர்த்தாக்குதல்கள், இறுதியில், தமிழர்படைக்கு வெற்றியைக் கொடுத்தன.

அன்றைய பகல்சண்டையில் 3 ராங்க்குகள் அழிக்கப்பட்டுள்ள அதேவேளை, 50ற்கும் மேற்பட்ட படையினர் பலியாகியிருந்தனர். 300ற்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்திருந்தனர். மாங்குளத்தைக்கைப்பற்ற முயன்ற பகைவனின் முயற்சி படுதோல்வி கண்டது. தாக்குதலை ஆரம்பித்த இடத்திற்கே எதிரி விரட்டியடிக்கப்பட்டிருந்தான்.

ஜயசிக்குறுய் துருப்புகளுக்கு நம்பிக்கையை ஊட்டி – அவர்களை உற்சாகப்படுத்தும் ஒரு இராணுவ நிகழ்ச்சியாக மாங்குளக் கைப்பற்றலை படைத்தலைமை கருதுகின்றது.

மாங்குளத்தைக் கைப்பற்ற பகைவன் பல தடவைகள் சண்டைபோட்டுள்ளான். ஒவ்வொரு முயற்சியின்போதும் வெவ்வேறுவகையான நகர்வுத்தந்திரங்களைப் பயன்படுத்திவருகின்றான். எனினும் எடுத்த அனைத்து முயற்சிகளிலும் எதிரிப்படை தோல்விகண்டுள்ளது. இருந்தபோதிலும மேலும் – மேலும் முயற்சிகள் செய்ய படைத்தலைமை தயார்படுத்தல்களைச் செய்கின்றது. ஜயசிக்குறுய் சமரின் தலைவிதியை நிர்ணயிக்கும் ஒரு தீவிர சண்டைக்களமாக மாங்குளம் மாறிவிட்டது.



மாங்குளத்து மண்பிடிக்கத் தாவிவந்த திமிர்பிடித்த இரும்பரண் – சிறைபிடித்த உவகைபொங்க ஏறிவிளையாடும் வேங்கைகள்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

# சந்திரிகா அரசின் இராணுவநலனும் தமிழ்மக்களின் அவலவாழ்வும்

## புலிகளின் குரல்

சிங்களவர் நலன்களையும், சிங்கள-பௌத்தபேரினவாதத்தின் அபிலாசைகளையும் பராமரித்து – பாதுகாப்பதை மட்டுமே சந்திரிகா அரசாங்கம் தனது தலையாய கடமையாகக் கொண்டுள்ளது.

தமிழ்மக்களது அன்றாட வாழ்க்கையின் அவசியத்தேவைகளை அனுபவிக்க அவர்களை அனுமதிப்பதா! இல்லையா! என்பதை இராணுவநலன் என்ற தராசில் வைத்து மதிப்பிட்டபின்பே சந்திரிகா அரசாங்கம் முடிவெடுக்கின்றது.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழர் தாயகத்தில் நடைபெறும் கைதுகள் -சோதனைச்சாவடிவாழ்க்கை - சுற்றிவளைப்புக்கள் -பிரயாணக்கெடுபிடிகள் என்பன சிங்களத்தின் இராணுவநலனைப் பிரதிபலிப்பவையாகவே உள்ளன. அத்துடன், தனது இராணுவ அபிலாசைகளைக் கருத்திற்கொண்டே, தமிழ்மக்களின் விவசாய - கடல்சார் உற்பத்திகளுக்கான உள்ளீடுகள் மற்றும் உபகரணங்களின் தடையும் அமைந்துள்ளது. இப்போது, யாழ்ப்பாணத்தில் அரச உத்தியோகவழங்கலிலும் இராணுவச்சிபார்சே முக்கியமான தகுதியாகத் தேவைப்படுகின்றது என்று அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

ஆக்கிரமிப்பு ஆட்சியில் மட்டுமல்ல, தென் இலங்கையிலும், குறிப்பாக கொழும்பு மாநகரிலும் தமிழர்களின் வாழ்க்கை முற்றுமுழுதாக சிங்களத்தின் இராணுவ நலனுக்கு உட்பட்டதாக மாறி வருகின்றது. அங்கே தமிழர்கள் கூண்டோடு கைது செய்யப்படுவதற்கும்; பால், வயது வேறுபாடுகள் இன்றி – பண்பாட்டு மரபுகளை உதாசீனம் செய்து, நாய்பிடிப்பதுபோல தமிழர்கள் நடாத்தப்படுவதற்கும், முதலில் இராணுவ நலன் பின்பே மற்றவை என்ற சந்திரிகா அரசாங்கத்தின் கொள்கை நிலைப்பாடே பிரதான காரணியாகும்.

இந்த நிலைப்பாடு காரணமாக, தமிழ் மக்கள் என்று வரும்போது சட்டங்கள்-தர்மங்கள் - பொதுவழமைகள் – இங்கித அணுகுமுறைகள் காலில் போட்டு மிதிக்கப்படுகின்றன. இதனால், என்றுமில்லாத வகையில், தமிழர்களின் வாழ்க்கை அவலம் நிறைந்ததாக மாறிவருகின்றது. இன அடையாளத்தின் அடிப்படையில் தமிழர்கள் இழிவுபடுத்தப்படுகின்றனர். சுருக்கமாகச் சொன்னால் - இன்று - கொழும்பு வாழ் தமிழர்கள், கிட்லர் கால ஜேர்மனியின் யூதர்கள்போல நடாத்தப் படுகின்றனர்.

ஒவ்வொரு நிமிடமும் சர்வதேசத்தின் பார்வையில் பட்டபடியுள்ள தலைநகரில் தமிழர்களுக்கு இந்நிலை என்றால், வெளிநாட்டார் நுழையமுடியாத– பத்திரிகையாளர்கள் செல்லமுடியாத இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் தமிழ்மக்களின் அன்றாட வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதை ஒருவர் ஊகித்தறிய முடியும்.

இனப்பிரச்சனைக்கான தீர்வு என்ற பேச்செழும்போது அதற்கான தீர்வு யோசனைகளை இராணுவத்தராசில் வைத்தே சந்திரிகா அரசாங்கம் மதிப்பிடுகின்றது. தமிழர்தரப்பிலிருந்து எழும் ஒவ்வொரு சாதாரண கோரிக்கையும் இராணுவத் தராசில் எடைபார்க்கப்பட்டே முடிவு சொல்லப்படுகின்றது.

அன்று, அம்மையாருடன் நடந்த அமைதிப்பேச்சுக்களின் போது, பூனகரி முகாமைமூடி, குடாநாட்டிற்கு சுதந்திரமான பிரயாணப்பாதையொன்று திறக்க உதவுமாறு கோரியபோது – வெளிப்படையாகவே -தனது இராணுவநலனைக் காரணங்காட்டி, அரசாங்கம் மறுத்துவிட்டது. ஆனால், இன்று அதே இராணுவநலனுக்காக குடாநாட்டிற்கு பாதைதிறக்க அதே அரசாங்கம் முயற்சி எடுத்து வருகின்றது.

குடாநாட்டிற்கு தரைப்பாதை திறக்க வன்னியில் ஒரு பாரிய படையெடுப்பை நடாத்திக் கொண்டிருக்கும் அதேவேளை, மட்டக்களப்பு - கொழும்பு தரைப்பாதையை மூடிவிட அங்கே ஒரு படைக்குவிப்பை சந்திரிகா அரசாங்கம் செய்துள்ளது. எதிரும் புதிருமான இந்த இரண்டு நோக்கங்களுக்கும் சிங்களத்தின் இராணுவ நலனே முழுமுதற் காரணியாகும்.

'போர்மூலம் சமாதானம்' என்ற அம்மையாரின் கருத்துருவமும் இராணுவ நலனை அடிப்படையாகக் கொண்ட ஒரு அடக்குமுறைச் சித்தாந்தமேயாகும்.

சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் இராணுவ நலனானது, தமிழரின் தேசிய வாழ்வை அழிக்க முயல்வதையும் – தமிழ் மக்களின் அன்றாட வாழ்வைச் சிதைத்து - வதைப்பதையுமே இலட்சியமாகக் கொண்டது. இராணுவ நலனுக்கு முன்னுரிமை கொடுத்தபடி தமிழரின் தேசிய இனப் பிரச்சனையைத் 'தீர்க்க' முயலும் சிங்கள அரசின் எந்த ஒரு முயற்சியையும் புலிகள் இயக்கம் அனுமதிக்க மாட்டாது. ○

## தாய்மைக்குத் தெரியும் விடுதலையின் முகம்!

புதல்வர்கள் இல்லாமல்
திரும்பும் புரவிகளில்
விழிகளை குவித்து
இவள்
யுகம் யுகமாய் நிற்கிறாள்.
பழைய புறநானூற்று
வரிகளிலும்
இன்றைய நீக்ரோவின்
பாடல்களிலும்
அந்தப்
பெரு மூச்சின் வெப்பம்
இன்னும் தொடர்கின்றது.
எல்லைகள் கடந்தது
இவளின் கண்ணீர்.

சந்தடி செய்யாமல்
புறப்பட்டுப் போனவன்
படுத்திருந்த பாய்
இன்னும்
விரித்தபடி கிடக்க –
பிடரி மயிரை
நீவிய விரல்கள்
பாயின் கோரை வரிகளைத் தடவும் —
அவன் மேனியில் அழுந்திய
கோரை வரிகளில்
அவனைத் தரித்த
கருப்பைச் சூடு
மூடிக் கிடக்கும்.
எல்லாக் கதவையும்
விடுதலையின் கரங்கள்
தட்டும் ஓசை
தங்களுக்கு மட்டும்
கேட்கும் என்று
பாயில் புரளும்
புதல்வர்கள் நினைக்கிறார்கள்.
ஊருக்குள் பிரவேசிக்கும்
விடுதலையின் மூதற்சுவடு
யாருக்கும் முந்தி
இவளுக்குக் கேட்கும்.
ஒவ்வொரு தாய்க்கும்
விடுதலையின் முகம் தெரியும்.
கட்டுகள் அறியாத
காலத்தில்
தாய்மை அவளுடன்
கைகோத்திருந்தது.
தாய்மைக்கு வாய்த்த
பிரபஞ்ச மூதற் தோழி
விடுதலை தான்.

உனது நொடிகளை
ஏந்திய துப்பாக்கியிலும்
தனது அமரத்துவத்தை
அணிந்த சயனைட் குப்பியிலும்
நிச்சயித்தபடி நிற்கும் இவன் -
"யாரென வினவுவீராயின்"
இவன் சேய்
நான் தாய்
எமது இல்லம்
புலி பிறந்து வளர்ந்த குகை.

பாசாங்கு செய்யாதே!
கிளியின் சிறகுகளை
முறிக்காதவன் போலவும் –
புறாவின் மார்பைத்
துளைக்காதவன் போலவும் ..
எம் மண்ணில்
நுழையு முன்பே
எவரது குருதியால்
கறைப்பட்டுப் போயின
உனது கொடிகள்?
விரிந்து செல்லும்
உனது நெருப்பால்
எரிந்த குருவிக் கூடுகள்
எத்தனை
எத்தனை?
புரியுமா உனக்கு?
நீட்டிய உனது
துப்பாக்கிக்கு முன்பு
வற்புறுத்தப்பட்ட
கேடயங்கள் அல்ல யாம் –
பருந்தை எதிர்த்துக்
கோழி, சிறகை விரிப்பது
குஞ்சுகள் கூடி
மீட்டுவதாலா?
நிற்பும் நாங்கள்
பத்து மாதம் சுமந்த
கர்ப்பப்பைகள்.
முடிந்தால் கிழித்துக் கொள்
மறுபடியும் மறுபடியும்
பிரசவிப்போம். ○

கவிஞர் இன்குலாப்

# இலங்கைத்தீவில் அமெரிக்கத்தலையீடு:
# கழுகு தரையிறங்குகின்றது!

அமெரிக்க அரசின் உயர்நிலை அரசியல் அதிகாரிகளும் பென்டகனின் இராணுவ அவதானிகளும் – அதனது சிறப்புப் படைப்பிரிவுகளின் பயிற்சிநிபுணர்களும்- அடிக்கடி – கொழும்பிற்கும் களமுனைகளுக்குமென பயணம் செய்கின்றனர்.

அமெரிக்க இராணுவத்தின் சிறப்புப்படைப்பிரிவான கிறீன் பரேட்டின் பயிற்சியாளர்கள், சிங்களத்தரைத்துருப்புகளுக்கு சமர்ப் பயிற்சி அளித்துவருவது பழையசங்கதி. இப்போது, அமெரிக்கக் கடற்படையின் தாக்குதலணியான ''சீல்'' கொமாண்டோப்பிரிவின் பயிற்சியாளர்கள் – சிங்களக்கடற்படையினரின் கடற்சண்டைத்தரத்தை உயர்த்தவென – கொழும்பு வந்துள்ளனர்.

இதேசமயம், வடக்கு கிழக்கு போர்முனைகளுக்கு நேரடி விஜயம்செய்யும் அமெரிக்க அதிகாரிகள் சிங்களப்படைமுகாங்களில் தங்கிநின்று – சிங்களப் படைத்தளபதிகளுடன் சந்திப்புக்களையும் – கலந்தாலோசனைகளையும் நடாத்திவருகின்றனர்.

இதேசமயம், உயர்தொழில்நுட்ப இராணுவ உபகரணங்களை அமெரிக்க அதிகாரிகள் சிங்களப்படைக்கு வழங்கிவருகின்றனர். சிங்களத்துருப்புகளுக்குச் சிம்மசொப்பனமாக மாறிவிட்ட புலிகளின் மோட்டர் – ஆட்டிலறிகளை அழிப்பதற்காக அவற்றின் ஏவுதளங்களை இனங்காணமுயலும் நவீன வேவுச்சாதனங்களையும் அதற்கான பயிற்சியாளர்களையும் இலங்கைக்கு அது அனுப்பிவைக்கின்றது.

மொத்தத்தில், சிறிலங்கா அரசின் படைபலத்தை பலப்படுத்தி விடுவதிலும்- இலங்கையின் இனப்போரில் தனது இராணுவத்தலையீட்டை அதிகரிப்பதிலும் அமெரிக்க அரசு தீவிரகவனம் செலுத்திவருகின்றது.

பயிற்சிகள் – சாதனங்கள் என்று படையியல்ரீதியான உதவிகளை வழங்கி, சிங்கள அரசுக்கு இராணுவ ஆதரவை தரும் அமெரிக்க அரசானது அரசியல் - இராஜதந்திர மார்க்கங்களிலும் இலங்கைத்தீவை தனது செல்வாக்கு மண்டலத்திற்குள் கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்கின்றது.

இலங்கைத்தீவு அமைந்துள்ள தென்னாசியப் பிராந்தியத்தில் தனது 'தேசிய' நலன்களைப் பேணவென அமெரிக்க அரசு நியமித்த முக்கிய அதிகாரிகள், அடிக்கடி, கொழும்பு சென்று- சிங்கள ஆட்சியாளர்களுடன் இரகசியப் பேச்சுக்களை நடாத்திச் செல்வது கடந்த சில வருடங்களில் அதிகரித்துச் செல்கின்றது.

மிக அண்மையில், அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் தென்னாசிய விவகாரங்களுக்கான துணை அமைச்சர் கால் இண்டபுத் (Karl Inderfuth), அமெரிக்க தேசிய பாதுகாப்புச்சபையின் தென்னாசிய விவகாரங்களுக்கான முத்தபணிப்பாளர் புரூஸ்ரைவில் ஆகியோருடன் ஐ. நா. சபைக்கான அமெரிக்கத் தூதர் பில் றிச்சட்சனும் கொழும்பு சென்று சந்திரிகாவையும் அவரது பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசியது குறிப்பிடத்தக்கது.

பல்வகை அரசியல் ஆதரவை சந்திரிகா அரசாங்கத்திற்கு நல்கிவந்த அமெரிக்க நிர்வாகம், தான் தயாரித்த பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் புலிகள் இயக்கத்தையும் இணைத்து- இதன் மூலம் சிங்கள அரசின் போர்முயற்சிக்கு அரசியல், தார்மீக ஆதரவைக் கொடுத்து- சிங்கள அரசையும் தன்வசப்படுத்தியுள்ளது.

இதேவேளை, பொருண்மிய உதவிகள் மற்றும் முதலீடுகள் என்ற ரீதியில் இலங்கைத்தீவின் பொருளாதாரத்திலும் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. கனியவளங்களைக் கிண்டி எடுக்கவென்றும், வானொலி- தொலைத்தொடர்பு நிலையத்திற்கென்றும் பெருமளவு நிலப்பரப்பை தனது கட்டுப்பாட்டிற்குள் எடுக்க அமெரிக்கா முயல்வது அனைவரும் அறிந்த செய்தி. போர்ச்சுமைச் செலவால் அல்லலுறும் சிங்கள அரசுக்கு பொருளாதார உதவிகள் புரிந்து கைதூக்கி விடுவதன்மூலம் போரையும் தூண்டிக்கொண்டு- இலங்கைத்தீவின் பொருண்மியத்தையும் தன்மீது தாங்கி நிற்கும் நிலைக்கு அமெரிக்கா இட்டுச் செல்கின்றது.

இதேவேளை, சிலாபப்பகுதியில் ஒரு பாரிய வானொலி அறிவியல் நிலையத்தை அமைத்துவிடுவதிலும் அமெரிக்கா அக்கறை காட்டுகின்றது. ஒலிபரப்பு நிலையம் என்ற கோதாவில் ஒரு தொலைத்தொடர்புத் தளத்தை இலங்கைத்தீவில் உருவாக்க அமெரிக்கா முயல்கிறது என்று சிலர் ஐயப்படுகின்றனர். இது அப்பிராந்தியத்திற்கான அமெரிக்க புலனாய்வு பிரிவினரின் செயற்பாட்டு மையமாக செயற்பட வாய்ப்புண்டு என்றும் அவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இவ்விதம், இராணுவ- அரசியல்- பொருளாதார – புலனாய்வு ரீதியில் இலங்கைத்தீவின் மீது தலையீடுகள் செய்து, தீவை தனது செல்வாக்கு மண்டலத்திற்குள் கொண்டுவர, அமெரிக்கா பகிரதப்பிரயத்தனம் செய்கின்றது. சந்திரிகா அம்மையாரின் அரசாங்கம் பதவியேற்றபின்னர் இந்த அமெரிக்கப்படையெடுப்பு தீவிரம் பெறத்தொடங்கியது.

புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனப்படுத்திவிட்டு, அதை ஒரு சாட்டாக வைத்து பயங்கரவாதத்தை ஒழிக்க சிறிலங்கா அரசுக்கு உதவுதல் என்ற போர்வையில் இலங்கைத்தீவில் தனது தலையீட்டை அமெரிக்கா வேகப்படுத்தியுள்ளது. இலங்கைத்தீவை தனது செல்வாக்கு மண்டலத்திற்குள் கொண்டுவர அமெரிக்கா எடுக்கும் முயற்சிகளுக்கு இந்தப்பிராந்தியத்தில் அது கொண்டுள்ள வல்லரசுநலன்தான் மிக முக்கிய காரணியாகும்.




இந்தியா-இலங்கை- பாகிஸ்தான்- பங்களாதேஸ்-நேபாளம்-பூட்டான் மாலைதீவுகள் ஆகிய நாடுகளைக் கொண்ட தென்னாசிய மண்டலத்தில் தனது வல்லாதிக்கச் செல்வாக்கை நிலைநிறுத்தக்கூடிய சாதக அம்சங்களைக்கொண்ட வாய்ப்பான அரசாக - அது சிங்களத்தைக் கருதுகின்றது.

அத்துடன் இந்துசமுத்திரப்பிராந்தியத்தின் கடல்வழி இராணுவக் கேந்திரமாக இலங்கைத்தீவு இருந்துவருகின்றது. இலங்கையின் இனப்போரில் சிங்களப்படைக்கு உதவுவதற்கென தனது கடல்கொமாண்டோ அணியான 'சீல்'பிரிவினரை அமெரிக்க அரசு அனுப்பினாலும்- அந்த உதவிப்பணிக்கும் அப்பால், இந்திய- இலங்கைக்கடற்பரப்பில்'சீல்'கொமாண்டோக்கள் எதிர்காலதேவைகருதி- சில இராணுவ ஆய்வுகளையும் இரகசியமாக மேற்கொள்வர் என்பது திண்ணம்.

இதேவேளை, இந்தப் பிராந்தியத்தின் மிகப்பெரிய நாடான இந்தியாவுடன் சிறிலங்கா அரசு கொண்டிருக்கும் அவநம்பிக்கை – அமெரிக்காவின் தெரிவிற்கு வலுச்சேர்த்துள்ளது.

சிறிலங்கா அரசானது அடிப்படையில் இந்திய எதிர்ப்புக் குணாம்சத்தைக் கொண்டிருக்கின்றது. காலத்திற்குகாலம், தனது இந்திய எதிர்ப்புநிலைப்பாட்டை பகிரங்கமாக வெளிப்படுத்தி வருகின்றது. இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு பேராபத்தை விளைவிக்கமுயன்ற இந்திய-சீன போரின்போது சீன ஆதரவு நிலைப்பாட்டையே சிங்கள அரசு கடைப்பிடித்தது. இந்தியாவின் ஆதரவுடன் நடந்த பங்களாதேஸ் விடுதலைப்போராட்டத்தின்போது-அந்த விடுதலைப்போரை அடக்கமுயன்ற பாகிஸ்தானிய போர்விமானங்கள், தனது நிலப்பரப்பிற்குமேலாகப் பறக்கா இந்திய தடைவிதித்தது (பாகிஸ்தானையும்- பங்களாதேசையும் இந்தியநிலப்பரப்பு பிரிக்கின்றது). இந்தநிலையில் பாகிஸ்தானிய போர்விமானங்களை இலங்கைத்தீவின் மேலாகப் பறந்து- இந்தியாவைச்சுற்றி- பங்களாதேசிற்குச்செல்ல சிங்கள அரசு அனுமதித்து- இந்தியாவுக்கு விரோதமாகச் செயற்பட்டிருந்தது.

இலங்கைத்தீவுமீது அண்மைக்காலமாக விரிவடைந்துவரும் அமெரிக்க ஆதிக்கத்தை இந்தியா கண்டும் காணாமலும் இருந்துவருகின்றது இதற்கு இந்தியாவின் உள்நாட்டு அரசியல்நெருக்கடியே பிரதான காரணியாகும். திலையான ஆட்சியின்மையால் இந்திய அரசு, கடந்தசில வருடங்களாக நிலைதடுமாறியபடி உள்ளது. உள்நாட்டு அரசியல்சிக்கல் முடிச்சுகளை அவிழ்ப்பதற்காக இந்திய ஆட்சிபீடத்தினர் அதிகளவு நேரத்தை செலவிட்டுவருவதனால் அதனது கொல்லைப்புறத்தில் புற்றுநோய்போல் பரவிவரும் அமெரிக்க தலையீட்டை, அது கண்டும்- காணாமலும் இருந்துவருகின்றது.

தென்னாசியப்பிராந்தியத்திலுள்ள தனது வல்லாதிக்க நலன்களை உறுதியாகப் பாதுகாக்கவேண்டுமாயின் சிங்கள அரசின் ஒற்றையாட்சி இரும்புப்பிடிக்குள் இலங்கைத்தீவு முழுவதும் இருக்கவேண்டும் என்று அமெரிக்கா விரும்புகின்றது. அதனால்தான் தமிழரின் விடுதலைப்போரை இராணுவ ரீதியாக ஒடுக்கி- இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்பை பாதுகாக்கத் தேவையான சகலவிதமான உதவிகளையும் சிங்கள அரசுக்கு நல்கிவருகின்றது. அமெரிக்காவின் இந்த நிலைப்பாட்டால் சிங்கள அரசும் உற்சாகம்பெற்று- தமிழ் இனத்துடனான போரைத் தீவிரப்படுத்துகின்றது. O



www.eelamview.com




நாட்டுக்கூத்து - தெருக்கூத்து என்று இதுவரைகாலமும் அழைக்கப்பட்டுவந்த கிராமியக்கலைவடிவம், இப்போது தெருவெளி அரங்கம் என்ற புதுப்பெயரைச் சூடியுள்ளது.

பெயர்சூட்டலில் மட்டுமல்ல அரங்கிற்கான கதைகளிலும் – அமைப்பிலும் - நடிப்பிலும் இது புதிய மாற்றங்களை உள்வாங்கிவருகின்றது.

புராணக் கற்பனைகளாலும் - நீதிக்கதைகளாலும் நிறைந்து வழிந்த தெருவெளி அரங்கை - புலிகள் இயக்கத்தின் பரப்புரைக்கலைஞர்கள் – ஒரு புதிய, அதேவேளை தாக்கம் நிறைந்த வடிவத்திற்கு மாற்றி எடுத்து, சாதனை புரிந்துள்ளனர்.

இந்தப் புதிய வடிவத்தையும் – புதுப்பொலிவையும் கண்டு தெருவெளி அரங்க ரசிகர்கள் புளகாங்கிதம் அடைகின்றனர்.

ஒப்பனைத் திரைகளைக் கழற்றிவைத்துவிட்டு, சமூகத்தின் அன்றாட மனிதர்களே பாத்திரங்கள் ஆகின்றனர்.

வாழ்வியல் யதார்த்தம் அரங்கக்கதைகளாகின்றன.

பாத்திரங்களின் தன்மைகள், அவற்றின் பால்வேறுபாடுகள் என்பவற்றிற்கு ஏற்றாற்போல் நடிகர்கள் அமர்த்தப்படுகின்றனர்.

மிகை நடிப்பு தவிர்க்கப்படுகின்றது.

இவைகாரணமாக தெருவெளி அரங்கம் இயல்பாக இருக்கிறது.

நடித்தல் என்ற செய்கைக்குப் பதிலாக வாழ்க்கை - யதார்த்தம் என்ற மனப்படிமங்களே பார்ப்போரைப் பற்றிப்பிடிக்கின்றன.

பார்வையாளர்களை நெகிழவைப்பதுடன், நாடகம் சொல்லும் சேதியை மனத்துள் உள்வாங்கத் தூண்டுகின்றது.

தெருவெளி அரங்கின் இன்றைய பிரபல்யத்திற்கும் - வெற்றிக்கும் இந்த அம்சங்கள் முக்கிய காரணிகளாகின்றன.

கலைக்காகமட்டுமல்லாமல்,தெருவெளி அரங்கம், போராட்டத்திற்கும் தனது பங்களிப்பை செவ்வனே செய்கின்றது.

சிங்களப் பேரினவாதத்தின் தமிழின விரோத அரசியல் சித்தாந்தத்தை, இந்த வகை நாடகங்கள் எளிமைப்படுத்தி- சாதாரண மக்களும் புரியும்படி நிகழ்த்திக் காட்டுகின்றன.

ஆக்கிரமிப்புப்படைகளின் அட்டூழியங்களை, தத்ரூபமாக, கண்முன்னால் கொண்டு வருகின்றன.

எதிரியின் இராணுவப் படையெடுப்புகளை – அதன் நாசகார நோக்கங்களை – திட்டங்களை – மக்கள்மொழியில் விளக்குகின்றது.

தமிழர்சேனையான புலிப்படையின் பலங்களையும் - அதற்கிருக்கும் இல்லாமைகளையும் சுட்டிக்காட்டி - எடுத்துவிளக்கி பார்ப்போரைச் சிந்திக்கவைக்கின்றன. செயலுக்குத் தூண்டுகின்றன.

இவைமட்டுமல்ல, போராட்டம் தொடர்பாக - போராட்டச்செயற்பாடு தொடர்பாக எமது மக்கள் விடையறியவிரும்பும் வினாக்களை - சந்தேகங்களை நாடகக்கதைமூலமே நிகழ்த்திக்காட்டி மக்களுக்கு விழிப்பூட்டும் அரசியல்ப்பணியையும் தெருவெளியரங்க நாடகங்கள் செயற்படுத்துகின்றன.

எமது தேசத்தின் கலைஞர்களுக்கு இருக்கின்ற தட்டிக்கழிக்கமுடியாத தேசியக்கடமையை தெருவெளி அரங்கக் கலைஞர்கள் பொறுப்புணர்ச்சியுடன் நிறைவேற்ற முயல்வது பாராட்டப்படவேண்டியதே!

இந்தப் போர்க்கால சூழலில், இயல்பாகவே எழக்கூடிய, பல்வேறு சிரமங்களையும் - ஆபத்துக்களையும் சந்தித்தபடி தெருவெளி அரங்கக் கலைஞர்கள், உற்சாகமாகப்பணிபுரிவது போற்றத்தக்கது. அவர்களின் தொழில்சார்உழைப்பு - நிபுணத்துவம் நிச்சயம் கௌரவிக்கப்படவேண்டியதே!

நாடகக்கலையின் ஒரு வடிவமான தெருவெளி அரங்கம், அதன் இன்றைய காலகட்ட தீவிர செயற்பாடுகாரணமாக தமிழீழவிடுதலைப்போராட்டத்தில் ஒரு தனித்துவமான வரலாற்றுப்பங்கை வகிக்கப்போகின்றது என்பது திண்ணம்.



www.eelamview.com

உடையார்!

இப்படித்தான் அவர் தன்னூரில் அழைக்கப்படுகின்றார்.

அவரது இயற் பெயர் வேலாயுதம்.

1920 களில் விதானையாகவும் - உடையாராகவும் உத்தியோகம் பார்த்த, வேலாயுதம் அவர்களின் பேரனாரின் உத்தியோகப் பெயரே பிற்காலத்தில் இவரது குடும்பப் பெயராகி விட்டது.

உடையார் குடும்பம், பழைய வட்டக்கச்சி கிராமத்தின் ஆதிக் குடிகளில் ஒன்று.

உடையார் விவசாயத்தில் ஊறித் திளைத்தவர். உழவுத் தொழில் தருகின்ற ஆத்ம திருப்தியை வேறு எந்தத் தொழிலிலும் அனுபவிக்க முடியாது. அந்தத் திருப்தி அவரது நிறைந்த வாழ்விலும் பளிச்சிட்டது.

பழைய வட்டக்கச்சி கிராமத்தின் மத்தியில், மா, பலா, கமுகு, வாழை, தென்னைகளின் பரிவாரங்கள் விரித்த நிழலில் உழைப்பின் உபரியாகிய உடையாரின் கல்வீடு நிமிர்ந்து, குளிர்ந்து நின்றது.

வீட்டைச் சுற்றிப் பரந்து விரிந்த வயல் நிலங்கள், ஒரு போகமே போகங்களைத் தவறவிடாது தளதளவென்று செழித்துக் கிடக்கும்.

தன் நிலம் தனக்கு வாரி வழங்கியதை, இல்லையென்று இரந்தவர்க்கு உடையார் இல்லையெனாது கொடுத்தார். இராணுவ அட்டூழியங்களால் நிலமிழந்து, நிலைதளர்ந்து தன்னிடம் வந்தவர்களுக்கு, வேலைகொடுத்து வயிறு நிறைத்தார்.

வெளிக்கண்டல் குடியிருப்பைத் தமது பலிபீடமாகத் தெரிவு செய்த விமானங்கள் - குண்டுகளை இறைத்து அந்தக் குடியிருப்பை உலுப்பிச் சரித்தன.

குண்டெறிந்து செல்கின்ற இரண்டு ஒளிக்கீற்றுகளையும் விழிகளால் பற்றிவிட முயன்று, தோற்ற உடையார், "எந்த வயிறு பத்தியெரிய ஆரக் கொத்திக்கொண்டு போறானோ தெரியேல்ல" என்று புலம்பிக் கொண்டிருக்கும் போதே அந்தக் கொடூரம் அவர்மீதே தரையிறங்கியது.

உடையார் வீட்டையும் பலிபீடமாக உருவகித்த விமானங்கள் அதன் மீதும் குண்டுகளைத் துப்பின,

பேரொளியும், பெரு முழக்கமும் அந்தக் கணத்தையே இடித்து நொருக்கின.

பூமி பிளந்து அந்தப் பிரதேசத்தையே உள்ளிழுத்த பிரமை.

ஒரு நொடிப்பொழுதில், அங்கேயிருந்த சிருஷ்டியின் உன்னதங்களெல்லாம் சிதைந்துபோயின.

விக்கித்து நின்ற காற்றசைந்து வீச, அங்கே மண்டிக்கிடந்த கந்தகப் புகை கலைந்து போனது.

சற்றுமுன் அழிந்த திசைகள் உயிர்த்திருந்தன.

பூவும், பிஞ்சும், காயும், கனியுமாய் முற்றத்தில் கொத்தாய் நின்ற அவர்களை குண்டுகள் இறைச்சிகளாய் அறுத்துப் போட்டிருந்தன.

வீட்டின் மீது ஒன்றும், பின் வளவில் இரண்டும், முற்றத்தில் ஒன்றுமாக நான்கு குண்டுகள் நர்த்தனமாடிய அந்த அரங்கு

# ஒரு நொடிப்பொழுது

**எஸ். உமாஜிப்ரான்**

தன்னிடம் வேலை செய்பவர்களையெல்லாம் தன் உறவுகளாய் அரவணைத்து, ஆதரித்த உடையார் குடும்பம் இன்று உருக்குலைந்து கிடக்கிறது.

26. 03 98 – எப்போதும் போலவேதான் அன்றும் விடிந்தது.

ஒரு இரத்தக்களரியைச் சந்திக்கப் போவது தெரியாமல் அந்தக் காலைப் பொழுது சுறுசுறுப்போடு அசைந்து கொண்டிருந்தது.

உடையார் வீட்டில் எட்டு நாட்களுக்கு முன்பு நிகழ்ந்த திருமணத்தின் கலகலப்பு இன்னும்தான் கலையவில்லை. பாவம் அந்தக் குடும்பம். ஒரு பயங்கரம் அவர்கள் மீது படியப்போவதை எந்த ஒரு கெட்ட சகுனமும் அவர்களுக்கு உணர்த்தவில்லை.

காலை 8. 00 மணி

பேரிரைச்சலைக் காற்றில் நுழைத்தபடி, ஒளிக்கீற்றுகளென வானில் முளைத்த இரண்டு கிபிர் விமானங்கள், அழகிய கொடூரத்தை தெளிந்த வானில் வரையத் தொடங்கின.

யாரைப் பலியெடுப்பதற்கு இந்தப் பீடிகை?

நானா? நீயா? எங்களையா? அவர்களையா? வட்டக்கச்சியா? கண்டாவளையா? அல்லது வேறெங்கோவா? நிலத்தில் உயிர்கள் தவித்தன.

அந்தத் தவிப்பும், பீதியும் முகத்தில் வழிய, வானத்தை வெறித்தபடி உடையாரும், அவரது பிள்ளைகளும், அவரோடு இருக்கின்ற அவரது ஊழியர்களும் வீட்டு முற்றத்தில் குழுமி நின்றனர்.

சிதைந்து கிடந்தது.

இதந்தரு மனையும், மனை சூழ்ந்த சோலைகளும் கந்தலாய்க் கிழிந்து கிடந்தன.

சற்றுமுன் வரைக்கும் அந்த வீட்டுக்குக் களையூட்டிய உயிர்களில், ஆறு உயிர்களைக் குண்டுகள் உறிஞ்சியெடுத்துவிட்டன.

அந்த ஆறில் ஒன்று உடையாரின் குருதிப்பூ. 21 வயது நிரம்பிய யாழினி. அந்த மாணவியின் வண்ணங்கள் மிளிர்ந்த வாழ்வை, தொடைகிழித்த ஒரு துண்டு இரும்பு துடைத்தெடுத்துச் சென்றுவிட்டது.


மற்ற ஐந்து பேரும் ஊழியர்களாய் வந்து, உடையாரின் உறவுகளாய் நெருங்கியிருந்தவர்கள்.

உடல் கிழித்து உயிரெடுத்த இரும்புத்துண்டுகள், வேறு ஆறு சீவன்களின் உடலைமட்டும் கிழித்துவிட்டு உயிரெடுக்காமல் விட்டு விட்டன.

அந்த ஆறு சீவன்களில் உடையாரின் மூத்த மகள் பாமினியும் ஒருவர். சாமி அறையின் மீது குண்டு விழும் போது பக்கத்து அறைக்குள் நின்ற பாமினிக்கு வயிறு பொத்தலாகி குருதி கொப்பளித்தது. இடிந்துவீழ்ந்த சுவரேறிக் குதித்து முற்றத்துக்கு ஓடிவர, அடிவயிற்று ஓலங்களால் முற்றம் அதிர்ந்து கொண்டிருந்தது.

வெடிப்பதிர்வு - குருதிப்பெருக்கு - மரண ஓலம் - மூன்று அதிர்ச்சியலைகளும் ஒன்றாய்த்திரண்டு – பாமினியின் புலனழித்து அருகிலிருந்த கிணற்றுக்குள் விழுத்தி விட்டன.

## காலமும் காட்சியும்





அவளின் உயிரை, அயலவர்கள் கிணற்றிலிருந்து அள்ளியெடுத்து விட்டனர்.

(11ஆம் பக்கம் பார்க்க)



www.eelamview.com

# தாயக மீட்புப் போரும் — உலகத் தமிழரின் பங்கும்

**தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள், அண்மையில் அனைத்துலக தமிழீழமக்களுக்கு விடுத்த விசேட உரையிலிருந்து முக்கிய பகுதிகளை இங்கு பிரசுரிக்கிறோம்.**

தமிழீழத் தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து, உலகின் பல்வேறு நாடுகளில் நீங்கள் வாழ்ந்து வந்த போதும், உங்களது சொந்த மண்ணின் விடுதலைக்காக, உங்களது சொந்த மக்களின் விடிவிற்காக, காலம் காலமாக நீங்கள் செய்து வரும் பங்களிப்பிற்கும் உதவிகளுக்கும், தமிழீழ மக்களின் சார்பில், முதலில் எனது நன்றியைத்தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழீழ மக்களுக்கு அநீதி இழைக்கப் படும் பொழுதெல்லாம், அவலங்கள் ஏற்படும் பொழுதெல்லாம்,நீங்கள் உணர்வோடு கிளர்ந்தெழுந்து, ஒன்று சேர்ந்து குரல் கொடுத்து, மாவிடத்தின் மனச்சாட்சியை தட்டிக்கேட்டு வருகிறீர்கள். உலகின் தலைநகரங்கள் எங்கும் ஊர்வலங்கள் நடத்தி, ஆர்ப்பாட்டப்பேரணிகள் நடத்தி, உலகளாவிய ரீதியில் நீங்கள் நடத்திவரும் எழுச்சிப் போராட்டங்கள் எமது தேசவிடுதலைப் போராட்டத்திற்கு சர்வதேச முக்கியத்துவத்தைப் பெற்றுத்தருகிறது.

கடல்கடந்து, புலம்பெயர்ந்து அந்நிய தேசங்களில், அந்நிய பண்பாட்டுச் சூழலில் நீங்கள் வாழ்ந்து வந்த போதும், உங்களது தேசப்பற்றும் இனப்பற்றும் தணியாத நெருப்பாக எரிவதைக் காண எமக்கு மகிழ்ச்சியும் பெருமிதமும் ஏற்படுகிறது. தாயக பாசத்துடன் தேசத்தின் விடுதலைக்காக, உலக அரங்கில் நீங்கள் எழுப்பிவரும் உரிமைக்குரல், ஒடுக்கப்பட்டு வரும் எமது மக்களிற்கு தெம்பையும் திடத்தையும் கொடுத்து வருகிறது. பாராமுகங்காட்டும் இந்த உலகத்தில் நாம் தனித்து நிற்கவில்லையென்ற தன்னம்பிக்கையையும் எமக்குத் தருகிறது.

உலகின் எந்தப்பகுதியில், எந்தச் சூழலில், எந்தத்தகுதியுடன் நீங்கள் வாழ்ந்தாலும், தமிழீழத்தில் தான், அந்தத்தாயக பூமியில்தான் உங்களது வேர் ஆழப்புதைந்து கிடக்கிறது. இந்த மண்ணில் தான் உங்களது இனத்தனித்துவத்தின் அடையாளம் பதிந்து கிடக்கிறது. இந்த மண் உங்களது இரத்தத்தோடும், ஆன்மாவோடும், உங்களது வரலாற்றோடும் ஒன்று கலந்து கிடக்கிறது. இத்தாயக தேசம் எதிரியின் ஆதிக்கப் பிடிக்குள் சிக்கி அழிந்து போகாது பாதுகாப்பதில் உங்களுக்கும் பெரும் பங்கு உண்டு; பொறுப்பு உண்டு; கடப்பாடு உண்டு.

## ஆக்கிரமித்த பகுதிகளில் இராணுவப் பேயாட்சி

இன்று எமது தாயகம் பெரும் ஆபத்தையும், அழிவையும் எதிர்கொண்டு நிற்கின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். இன்றைய அரசு, மிகவும் பெரியளவிலான போரை எமது மண் மீது ஏவிவிட்டிருக்கிறது. தமிழரின் தாயகத்தை ஆக்கிரமித்து, சிதைத்து, அழிப்பது எதிரியின் நோக்கம். தமிழரின் தேசிய அடையாளத்தை அழித்து, சிங்கள பௌத்த ஆட்சியின் கீழ் தமிழரை அடிமைகொள்வது இதன் குறிக்கோள்.

சிங்கள அரசின் இந்த ஆக்கிரமிப்பு போர் எமது தேசத்தின் வளத்திற்கு என்றுமில்லாத பெரும் நாசத்தை விளைவித்து வருகின்றது. படையெடுப்புகள் என்றும், படைநகர்வுகள் என்றும், பாதுகாப்பு வலயங்கள் என்றும், பாதை திறப்பு என்றும் சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவம் எமது தேசத்தில் ஒரு அழிக்கூத்தை நடத்திவருகின்றது. வீதிகளை தகர்த்து, வீடுகளை சிதைத்து, கட்டிடங்களை தரைமட்டமாக்கி, மரங்கள், தோட்டங்கள், வயல்களை அழித்து எண்ணற்ற கோடி பெறுமதியான சொத்தழிவை ஏற்படுத்தி வருகிறது. எமது முன்னோரும், மூதாதையோரும் அரும்பாடுபட்டு கட்டியெழுப்பிய நகரங்களும், பட்டினங்களும் வளமிகு கிராமங்களும், முகந்தெரியாதவாறு சிதைக்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற தமிழரது வரலாற்று புகழ்மிக்க, பழம்பெரும் நகரங்கள் இராணுவ ஆட்சியின் இரும்புப்பிடிக்குள் சிக்கி, சீரழிந்து வருகின்றன. இங்குள்ள மக்கள், சுதந்திரத்தை இழந்து, கௌரவத்தை இழந்து, பெரும் பயத்துடனும், பதற்றத்துடனும் வாழ்ந்து வருகின்றார்கள். இங்கெல்லாம் இராணுவ அட்டூழியம் தலைவிரித்தாடுகிறது. இங்கு நாளாந்தம், சுற்றிவளைப்புகளும், தேடுதல்களும், கைதுசெய்தலும், காணாமற்போதலும், கொலையும், பாலியல் வன்முறையுமாக இராணுவ பேயாட்சி நடந்து வருகிறது. இப்பொழுது யுத்தம் முனைப்புப் பெறும் வன்னிப் பெருநிலத்தில், பாதைதிறப்பு என்ற திட்டத்துடன் இராணுவம் அகலக்கால் வைக்க முனைகிறது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்பதால், இங்கு வாழும் மக்களை, திட்டமிட்ட முறையில், அரசு தண்டித்து வருகிறது. உணவிற்கும் மருந்துப் பொருட்களுக்கும் தடைவிதித்து நிவாரணத்தை நிறுத்தியதால், பசியும் பட்டினியும், நோயும் சாவுமாக, இங்குள்ள மக்கள் படும் அவலங்கள் மிகக் கொடியது.

## பாராமுகம் காட்டும் சர்வதேச சமூகம்

தமிழர் தாயகத்தில், போர் என்ற போர்வையின் கீழ், சமாதானத்திற்காக யுத்தம் என்ற கோசத்தின் கீழ், திட்டமிட்ட முறையில் இன அழிப்பு நிகழ்ந்து கொண்டிருக்கிறது. தமிழர் தேசம் படிப்படியாக ஆக்கிரமிக்கப்பட்டு, சிதைக்கப்பட்டு வருகிறது. எமது மண்ணில் நிகழ்ந்துவரும் இந்த மாபெரும் அவலத்தை, இன அழிவை, கண்டுங் காணாதது போல, உலகம் பாராமுகம் காட்டிவருகிறது.



மௌனம் சாதித்து வருகிறது. ஆனால், அதே வேளை, எமது எதிரியின் இன அழிப்புப் போருக்கு, முழு உலகமும் முண்டுகொடுத்து வருகிறது. பெருந்தொகையில் நிதியுதவி வழங்கி வருகிறது. பெருமளவில் ஆயுதங்களை அள்ளிக்கொடுக்கிறது. உலகத்தின் ஆதரவும், உதவியும் இருப்பதால் தான் சந்திரிகா அரசினால் இந்தப்போரை தொடர்ந்து நடத்த முடிகிறது. சிங்களப் படையினருக்கு பேரிழப்புகள் ஏற்பட்டபோதும், போர்ச்செலவினம் சிகரத்தை எட்டியபோதும், பொருளாதாரம் சீர்குலைந்தபோதும், அரசாங்கம் போர் வெறிகொண்டு இராணுவ கடும் போக்கை கடைப்பிடிப்பதற்கு உலகத்தின் ஆதரவுதான் காரணம்.

சந்திரிகா அரசின் உண்மையான இனவாத முகத்தை உலகமானது இன்னும் அடையாளம் காணவில்லை. மாறாக, சந்திரிகாவை ஒரு சமாதானப்பிரியையாகவே காண்கிறது. சந்திரிகா நடாத்தும் போர், சமாதானத்திற்காகவும் தமிழரின் விமோசனத்திற்காகவும் மேற்கொள்ளப்படுவதாக நம்புகின்றது. ஒரு புறம் சமாதானப் போர் என்றும், மறுபுறம் தீர்வுப்பொதி என்றும், சந்திரிகா அரசு முன்னெடுக்கும் இரட்டை அணுகுமுறையானது, இலங்கைத் தீவில் சமாதானத்தை தோற்றுவித்து, தமிழரின் இனப்பிரச்சனையை தீர்த்துவைத்து, ஒரு நிலையான ஆட்சிமுறைக்கு வழிகோலும் என உலகம் எதிர்பார்த்து நிற்கின்றது. அப்படியான ஒரு அரசியல் மாயையைத்தான், சிங்கள அரசு உலகத்திற்கு உருவகித்து காட்டி இருக்கிறது. மிகவும் நுட்பமான பிரச்சார உத்திகளை கையாண்டு, உண்மைகளை திரித்து ராஜரீக வித்தை காட்டி; மிகவும் சாதுரியமான முறையில் சர்வதேச உலகத்தை ஏமாற்றி இருக்கிறது. ஒரு அரசு என்றரீதியில் சிறிலங்காவின் குரலிற்கு ஒரு நம்பகத்தன்மை இருக்கும் என உலக நாடுகள் எண்ணியிருக்கலாம். அந்தக் குரலும், ஒரு தமிழனின் குரலாக ஒலித்து, சந்திரிகாவின் இனவழிப்புப்போரை சமாதானத்திற்கான போராக நியாயப்படுத்திய போது, அதனை உலகம் நம்பியது. தமிழரின் மூளைவளத்தை விலைகொடுத்து வாங்கி, அதனை தமிழருக்கு எதிராகப் பயன்படுத்தும் அரசியல் சாணக்கியம் சந்திரிகா அரசிடம் உண்டு என்பதை உலகம் எப்படித்தான் புரிந்துகொள்ளப்போகிறது.

இன்றைய உலகமானது மனித நீதி என்ற அச்சில் சுழலவில்லை. மனிதம், தர்மம் என்ற தார்மீக அறங்கள் உலக உறவுகளை நிர்ணயிக்கவில்லை. ஒவ்வொரு உலக நாடும் தனது தேசிய நலனுக்கே முதன்மை கொடுக்கின்றது. இந்த நலனைப் பேணும் அடிப்படையிலேயே இன்றைய உலக ஒழுங்கும் உலக உறவுகளும் அமையப் பெற்றிருக்கின்றன. இதுவே இன்றைய உலக யதார்த்தம்.

இலங்கையில் நெருக்கடி தீர்ந்து, சமாதானமும் நிலையான ஆட்சியும் தோன்றினால் தமது நலன்களைப் பேண வாய்ப்பாக இருக்குமென உலகநாடுகள் கருதலாம். இந்த எதிர்பார்ப்பில் தவறில்லை. ஆனால் இந்தச் சாதனையை சந்திரிகா அரசு நிலைநாட்டிவிடப்போகிறது என உலகம் நம்புவதுதான் எமக்கு ஏமாற்றத்தையும் கவலையையும் கொடுக்கின்றது.

## சிங்கள அரசின் நாசகார நோக்கம்

தமிழர் பிரச்சனைக்குத் தீர்வுகண்டு, தமிழர் தேசத்தில் அமைதியைக் கொண்டு வருவது →





www.eelamview.com

# அத்துமீறிய குடியேற்றமும் அநாதரவான தமிழினமும்

தமிழர் தாயகமாக கருதப்படும் வடகிழக் கில்- அன்றில் இருந்து இன்று வரை இவ்வுலகத் தினில் ஆட்சி செலுத்திவரும் சிங்களப் பேரின வாதக் கட்சிகளின் தலைவர்கள் திட்டமிட்ட சதி வலையில் சிங்களவர்களை குடியேற்றி வந்துள்ளனர்.

1930ஆம் ஆண்டில் டீ. எஸ் சேனனாயக்கா அவர்களின் மூளையில் இது நன்கு பதிந்துள் ளது என்பது தெட்டத் தெளிவாக உணரக்கூடி யதாய் இருக்கின்றது.

தமிழர்களைக் கீழ்மைப்படுத்தி அவர்களது பூர்வீக நிலங்களைச் சிதைத்து துண்டாடும் திட்டங்கள் முதல் கட்டமாக கிழக்கு மாகா ணத்தில் தான் ஆரம்பிக்கப்பட்டன.

''ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி திட் டம்'' என்ற பெயரில் பட்டிப்பளை, 'கல்லோ யா'வாகவும் நீர்ப்பாசனக் குளங்களை புனரமைப் புச் செய்கின்றோம் என்ற பூச்சாண்டியில் பதி வில் குளம், 'பதவியா' என்ற பெயராகவும் மாறி யது. ''அல்லை'', ''கந்தளாய்'' குளங்கள் சிங்க ளவரின் வயல்களுக்கு தமிழர் பிரதேசத்தின் நீரைப்பாய்ச்சும் திட்டமானது.

1960ம் ஆண்டு சிங்களவர்களை பெரும்பான் மையாகக் கொண்ட அம்பாறை மாவட்டம் தோற்றம் பெற்றது. 1970ம் ஆண்டு 1500 சதுரமைல் பரப்பளவில் ''அம்பாறை'', ''சேரு வாவில'' என சிங்களத் தொகுதிகள் முளைத்தன.

இதேபோல் மணலாற்றில் 3650ற்கு மேற் பட்ட சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட் டன. 1984ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ம் திகதி நாயாற்றுக்கு மேற்கேயும், தெற்கேயும் உள்ள பல தமிழ்த் தொன்மைக் கிராமங்கள் சிங்கள குடியேற்றமாக மாறியது. இதன் விளைவு 1986ம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் ''வெலி ஓயா'' என்ற பெயரில் சிங்கள வாக்காளர் பட் டியல் இணைக்கப்பட்டது.

1988ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ம் திகதி இலங்கை அரசினால் வெளியிடப்பட்ட பிரகட னத்தில் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டத் தின் பெரும்பகுதி விசேட பாதுகாப்பு வலய மாக பிரகடனம் செய்யப்பட்டது. சிங்களக் குடியேற்றங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக அரசினால் முன்வைக்கப்பட்ட பிரகடனம் இது என்பது தெளிவு.

திருமலை மாவட்டத்தை உற்று நோக்கு வோம். இது வடகிழக்கு தமிழர் தாயகத்தின் முக்கிய வரலாற்றுப் புகழ் மிக்க ஒரு மாவட்ட மாகும். இங்கு சிங்களக் குடியேற்றங்கள் எல்லை மீறியதாகவே உள்ளன.


இங்கு 1962ம் ஆண்டிற்கு முன்பே குடியேற்றங்கள் இடம்பெற்றுள்ளன. பனிக் கட்டிமுறிப்பு என்ற தமிழ்ப் பெயர் ''பனிக்கட் டியாவ'' என மாற்றப்பட்டது. பன்குளத்தின் அருகே அமைந்த ஊர்தான் பனிக்கட்டி முறிப்பு எனப்படுவது. இங்கு ஒரு விகாரையும் நிறுவ சிங்களவர்கள் முயன்றனர். இது எட்வேட் என்னும் இங்கிலாந்து அரசர் காலத்திலும் கூட தனித் தமிழ் கிராமமாக இருந்தமைக்கான வர லாற்று ஆவணங்கள் இன்றும் உள்ளன.

பன்குளத்தில் உள்ள கனகசபை என்ற தமிழ் மகனின் சொந்தக் காணியை அபகரித்து, 1973-09-27ம் திகதி சிறிலங்கா சுதந்திரக்கட் சியின் அமைப்பாளரும், அமைச்சருமாக இருந்த கே.பி. இரத்நாயக்கா பௌத்த பாட சாலைக்கு அடிக்கல் நாட்டினார். விஸ்வராமா சாபாவ பௌத்த கோயில் அடிக்கல் நாட்டு விழாவும் தமிழர் பூமியில் அன்று கோலாகல மாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கப்பல்துறை, பாலம்போட்ட ஆறு ஆகிய இடங்களில் உள்ள தமிழர்களின் காணிகளில் சுமார் 5000 ஏக்கரில் சிங்களக் குடும் பங்களை குடியமர்த்த வேண்டுமென, 04-09-1954ல் தீர்மானமிடப்பட்ட திருமலை துறைமுக அதிகாரசபையின் தீர்மானத்தை செயல்படுத்த வேண்டுமென பலர் வெளிப்படுத் தினர். பன்றி இறைச்சிக்கடை நடத்திய பொடி யப்பு சிங்கோ என்ற சிங்களவரின் மனைவிக்கு சமாதான நீதவான் பதவி கிடைத்தது. அந்து டன் பன்றி இறைச்சிக்கடை பொடியப்பு சிங்கோ, பௌத்த விகாரையின் கமிட்டி தலைவராகவும் இருந்துள்ளார்.

கட்டுக்குளப்பற்று மேற்கு, எல்லையில் உள்ள குருவியன் குளம், பொய் ஓடிச்சான் குளங்க ளோடு தொடர்புடைய காட்டுப் பிரதேசத்தை திருமலை அரச அதிபரே நிர்வகித்து வந்தார். அதை பௌத்த விகாரை பரிபாலனசபை 1988ல் பொறுப்பேற்று குடியேற்றத்தை உருவாக்கியது. அது மட்டுமன்றி முதலிக் குளத்தின் அருகே விமானப்படை முகாமையும் சிங்களக் குடியிருப் பையும் உருவாக்கி - முதலிக்குளம் என்ற தமிழ் பெயரை ''மொறவேவ'' என்ற பெயரோடு ஊரை நிறுவி, தமிழர்களின் 340 ஏக்கர் நீர்ப்பாசனக் காணியும் பறித்தெடுக்கப்பட்டு - பாரிய சிங்கள குடியேற்றமாக மாறியது. இவ்வாறாக மாறி, மாறி ஆட்சிபீடமேறிய சிங்கள அரசுகள் இன்று (1998) சுமார் 128ற்கும் மேலாக திருமலை மண் ணில் சிங்களக் கிராமங்களை உருவாக்கியுள்ளன.

இம்மாவட்டத்தில் உள்ள பெரிய குளம் என்னும் தமிழ் பிரதேசத்தில் 500 ஏக்கர் நிலத்தை பௌத்த விகாரைகளுக்கும் சிங்களக் குடிகளுக்கும் கொடுக்கவேண்டி 1965 யூலை 26ம் திகதி திருமலைக் கச்சேரியில் உயர் அதி காரிகளின் கூட்டம் நடைபெற்றது.



இவ்வாறான மகாநாடுகள் மூலம் 1973ம் ஆண்டில் 10738 குடும்பங்கள் இம் மாவட்டத் தில் அத்துமீறிக் குடியேறியுள்ளன. இது அன்று வெளியான ''சுதந்திரன்'' இதழின் கருத்தாகும்.

தமிழ் மக்களின் தாயகத்தை துண்டாடுவ தில் இவ்வரசாங்கங்கள் காட்டிய ஆர்வத்தை யும் அவாவையும் அப்பட்டமாகப் படம்போட் டுக் காட்டுகின்ற இவ்வாக்குமூலம் வாசகர்களின் அறிதலுக்காகக் கொடுக்கப்பட வேண்டியதே.

1983ம் ஆண்டு வான் ஓயா, மல்வத்து ஓயா பிரதேசங்களில் சிங்கள மக்களை குடியேற்றும் வேலைகள் ஆரம்பித்துவிட்டன. மகாவலி அமைச்ச ரின் இந்த இரகசியத் திட்டத்தை தமிழர்கள் சிலர் தடுப்பதற்கான காரியங்களில் இயங்கி வந் தனர். இவற்றையெல்லாம் ஒதுக்கித் தள்ளி விட்டு, 45000 மக்களை குடியேற்றுவதில் வெற்றி கண்டோம் என பேதிமன் குணரெட்ண ஒரு சமயம் கூறியிருந்தார்.

இந்தக் குடியேற்றங்கள் தாயகத்தை அழித்துவிடும் என்பது உண்மை. எனவே தான் திட்டமிட்ட முறையில் வலுகெட்டித்தனமாக, அன்று தொடக்கம் இன்றுவரை வடகிழக்கில் சிங்களக் குடியேற்றம் நடைபெற்றுக் கொண்டே வந்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள மல்வத்து ஓயா குடியேற்றத்தினூடாக மன்னாரை வட மேல் மாகாணத்திலிருந்து அப்புறப்படுத்தும் நாசகார நோக்கமும் இருந்தது. பதவியாக் குடியேற்றத்தினை பாதுகாக்கவும் தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசமான வடக்கையும் கிழக் கையும் பிரித்து - தமிழ் மக்களை வேறுபடுத்தும் மையக்கல்லாகவும் வெலிஓயா குடியேற்றத்திட்டம் விளங்கிவருகிறது.

மேற்குறிப்பிட்ட குடியேற்றத்திட்டங்களில் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் மகன், ரவி ஜெயவர்த்தனா முன்னின்று உழைத்தார்.

திருகோணமலைக்கு வடக்கே இருக்கும் யான் ஓயா பிரதேசத்தில் ஐம்பதாயிரம் மக் களை குடியமர்த்தி யாழ்ப்பாணத்திலிருந்து திரு கோணமலையையும் மட்டக்களப்பையும் துண் டித்து பதவியாக் குடியேற்றத்தை வலுப்படுத்து வது இங்கு மாறி, மாறி ஆட்சிபீடமேறிய பேரி னவாத அரசுகளின் உள்நோக்கமாகும்.

திருகோணமலை, வடகிழக்கு மாகாண அர சின் தலைநகரம் என்றும் தமிழ் மக்களின் பாரம்பரிய பூமி என்றும் தலைநிமிர்ந்து சொல்கின்றோம்.

அதே திருகோணமலையில் இன்று -அதாவது 1998வரை குடியேறியுள்ள சிங்களக் குடியேற் றங்களின் விபரத்தைப் பாருங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | சிறிமாபுர | 2. | அபயபுர |
| 3. | மிகிந்தபுர | 4. | 4ம் கட்டை |
| 5. | ஆண்டான்குளம் | 6. | வெல்கம்காரை |
| 7. | 10ம் கட்டை | 8. | மொறவெவ |
| 9. | மயில்வெவ | 10. | நாமல்வத்த |
| 11. | வானலை | 12. | கிளப்பன்பேக் |
| 13. | நாலந்த | 14. | கமதல்சுபுர |
| 15. | குறிஞ்சாக்குளம் | 16. | கொறவப்பொத்தான |
| 17. | 6ம் கட்டை | 18. | 20ம் கட்டை |
| 19. | கமதல்புர | 20. | புலஸ்திபுர |
| 21. | கோவில்வத்த | 22. | பாரியூற்று |
| 23. | கோவில்கடவல | 24. | 97 99ம் கட்டை |
| 25. | சீனிஆலை | 26. | ஜெயந்திபுர |
| 27. | ஜயபுர | 28. | தெகிவத்தை |
| 29. | நிலாப்பனை | 30. | அரிப்பு |
| 31. | கல்லாறு | 32. | அலிஓதுவ |
| 33. | சரகரா | 34. | 1ம், 2ம் கொலனி |
| 35. | சிறிபுர | 36. | மட்கோ |
| 37. | சேருவில | 38. | கந்தளாய் |
| 39. | 13ம் கட்டை | 40. | பன்குளம் |
| 41. | செவலபேக் | 42. | மண்டலபுர |
| 43. | சுமதிபுர | 44. | சோமாபுர |
| 45. | எல் 1.பி.1. 2 | 46. | கல்மேபுயால |
| 47. | சாலியபுர | 48. | அக்போபுர |
| 49. | கித்துளுத்து | 50. | அளுத்ஓயா |
| 51. | பொலிகண்டி | 52. | அடம்பன் |
| 53. | கல்லறவு | 54. | கிம்புள்பிட்டியாவ |
| 55. | மகாதிவுல்வெல | 56. | வேப்பங்குளம் |
| 57. | மல்கிடறிப் | 58. | 98ம் கட்டை |
| 59. | லங்கிரிகடவைப்பு | 60. | கோமரல்கவெவ |
| 61. | திலவுக்கடவெவ | 62. | ஓட்டிசாக்குளம் |
| 63. | மன்மதவாச்சி | 64. | சிங்கபுர |
| 65. | பொக்கியாட் | 66. | உன்பத்து |
| 67. | நாச்சிக்குடா | 68. | 5ம் கட்டை |
| 69. | 3ம் கட்டை | 70. | மொறவேவா |
| 71. | சுமித்ராவகம | 72. | மகாவல்கம |
| 73. | அல்லை | 74. | கொட்டுவே |
| 75. | கல்கட்டுவெல | 76. | கோம்புகட்டுவ |
| 77. | கல்கனிவெவ | 78. | மோறாமை |
| 79. | பொத்தலவெவ | 80. | குமுக்காவெல |
| 81. | மீசஸ்வெல | 82. | றொட்டுவேல |
| 83. | ஆனைக்கட்டி | 84. | கருந்தகம |
| 85 | பெக்கிலிகடவெவ | 86. | தென்னியா |
| 87. | சமந்தபுர | 88. | பராக்கிரமபுர |
| 89. | கிரிச்சண்டுகாயலிகள | | |
| 90. | 97 -92 -93ம் கட்டை | | |

இன்னும் எத்தனையோ இன்று முளைத் துள்ளன.

இந்த அத்துமீறிய குடியேற்றங்களால் அநா தரவாகியுள்ளது தமிழினமே. O

நன்றி- தினக்கதிர் ஏப்ரல் 5-11.1998
(மட்டக்களப்பில் இருந்து வெளிவரும் பத்திரிகை)

www.eelamview.com

# பனங்காம மண்ணை நெற்றியிலிட்டு வணங்காமண் போரிடும்

"தாமரைப் பூவினால் மாலைகட்டி - எங்கள்
தாயகப் பூமிக்குச் சாத்துங்கடி
பாமழையால் நிலம் பண்பட்டுப் போகவே
பாடியே கும்மிகள் கொட்டுங்கடி"
என்றான் ஒரு ஈழப்புலவன்.
"மட்டக்களப்புடன் யாழ்ப்பாணம் - வன்னி
மன்னார், திருமலை எம்தேசம்.
கொள்ளை அழகடி எங்கள் தமிழீழம்
கொட்டுங்கடி ஒரு வட்டக்கும்மி"
எல்லைவகுத்து எழிலுரைத்தான் ஒரு கவிஞன்.
பெற்றதாய் பெரியள்.
அவளே அனைத்துக்கும் ஆதிமூலம்
முலைசுரந்த அமுதூட்டிய முதல்வள் அவள்.
கருப்பைக்குள்ளிருந்து காலாலுதைத்தபோதும்
விருப்புற்றெம் பாதங்களுக்கு வெளியே முத்தமிட்டவள்.
தாயே சிறந்தவளெனினும்,
தாயகம் குறைந்தவளல்லள்.
கால்தொட்ட நாள்முதல் உயிர்தொட்ட உறவெது?
அன்னைமண் மீதான உறவேதான்.
பிறந்தமண் உறவே சிறந்தது.
தான் உயிர்கொண்டுலவிய தாய்மண்மீது
உறவற்றுப் போகுமொருவன்
மனிதனே அல்ல.
மண்ணிழந்த பின்னும் வாழ்வோமென்பது
கண்ணிழந்த பின்பும் காண்போமென்பதற்குச் சமன்.
கறந்தமுலையும், பிறந்தபூமியும்
சுரந்தூறும் அமிர்தக் கேணிகள்.
ஊர்க்கிணற்றில் குளித்து,
ஊர்ப்புறத்தில் உலவி,
ஊர்மடியில் உறங்கி
வாழுமொருவனுக்கே வாழ்வு சித்திக்கும்.
அன்னைமண்ணின் சுகமிருக்கே.... அது அலாதியானது.
எம்முந்தை எத்தனை தலைமுறையைத்
தாங்கியதித் தாய்மடி.
வயல்கள்,
வனங்கள்,
வீதிகள்,
வீடுகள்,
ஆறுகள் .... அருவிகளென்று
பரம்பரையின் வேர்களைத் தாங்கியதல்லவா இம்மண்?
பெற்றவள் பெற்றுப்போட்டுவிட்டுப் போய்விடுவாள்
அள்ளி அணைத்தது எது?
கட்டியணைத்தது இந்தக் காதற்தேசம் அல்லவா?
காலையானதும் பறவைகள் எங்கெங்கோ பறக்கின்றன
மாலையானதும் கூடுதிரும்புகின்றனவே .... ஏன்?
மேச்சலுக்குப் போகின்றன மாடுகள்
அந்தியானதும் வீடுதிரும்புகின்றனவே...— ஏன்?
தனக்கொரு தாய்மடி இருப்பதென்பதும்,
அந்தமடியிற் தூங்குவது ஆனந்தமென்பதும்
அவைகளுக்குத் தெரியும்.
வளர்ப்புநாய் வீடுகாக்கிறது.
கோழிவந்தாற்கூடக் குரைக்கிறதே— .. ஏன்?
இந்தவளவு எனதென்ற உறவின் உணர்வது.
என்தேசத்துக் கள்ளிச் செடியெனினும்
எனக்கது கற்பகவிருட்சம்,
என்தேசம் சுடுபாலை வெளியெனினும்
எனக்கது இந்திரலோகம்.
காகமெனினும் என்னூரின் காகமெனில்
எனக்கது பஞ்சவர்ணக்கிளி.
இந்த உணர்வு எவனுக்குக் கைவருமோ
அவன் மனிதனேயல்ல இறைவன்.
தாயகத்தைக் காதல் செய்பவன்... தேவன்.
சொந்தநாட்டில் உலவும்போது தலைகுனிவதில்லை.
வேறு எந்தநாட்டில் உலவும்போதும்
தலை நிமிர்வதில்லை.
மண்ணின் மடிபிளந்து மரம்வளர்கிறது
வளர்ந்ததும் நன்றிக்கடனாகக்
குடைபிடித்து நிழல் விரிக்கிறது.
தாயின் உடல்நேர் ஆறுபாய்கிறது
போகுமிடமெல்லாம் நன்றிக்கடனாகத்
தாகம் தணித்துச் செல்கிறது.
மண்ணிற் பிறந்ததுமுதல் இறக்கும்வரை
மனிதன் கிடக்கின்றான்.
நன்றிக்கடனாக என்னசெய்தான்?
ஒன்றுமில்லை.
தமிழனே!
தாயகமேனியைக் கூறுகள்போட்டு வேலி அடைத்தவனே!

## உலைக்களம்

– வியாசன்

இன்றுன் தாய் கண்ணீர் வடிக்கிறாள்.
மாற்றான் உன்தாயின் மடியேறி மிதிக்கின்றான்.
முட்கம்பிச்சிறைக்குள்ளே வதைசெய்கின்றான்.
மேனிமயிர் பொசுங்கக் கொழுத்தி எரிக்கின்றான்.
புண்ணாகியுள்ளாள் அன்னை.
என்ன செய்யும் உத்தேசம்?
தம் தாயகத்துக்குக் காயமேற்படுத்தியவனை
வியட்னாம் மக்கள் விரட்டியடித்தனர்.
பிறந்தமண்ணைப் பொசுக்கியெரித்தவனைச்
சீனமக்கள் துரத்தியடித்தனர்.
தமிழனே!
பிறந்தமண்ணோடு பெரிய உறவுள்ளவனே!
கண்ணீர்விடுகின்றாள் உன் காதற்தாய்.
அழகுக்கு இலக்கணமானவள் எம் அன்னை.
மட்டுநகர்வாவி அவளின் மேனியின் அழகுத் தேமல்.
கோணமலைமுகடுகள் அவளின் கோலமார்புகள்.
வன்னிக்காடுகள் பரந்த கூந்தல் விரிப்பு.
மன்னார்வயல்கள் முதுகுப்பரப்பு.
யாழ்ப்பாணம் அவளின் நெற்றிப்பொட்டு.
பேரெழிலோடிலங்கினாள் எம்பொன்மகள்.
கடல்கடந்து வந்தவரெம் தாயைச்
சிறையிருத்தினர்.
சிறையிருந்தபோதும் சிரித்தாளெம் தேவி.
பூனைக்கண்ணன்,
புகைக்கண்ணன்,
செங்கண்ணனென்று வந்து விலங்கிட்டனர்.
வந்தவரால் தங்கிநிற்க முடியவில்லை.
ஆத்தாள் பொறுத்திருந்து வென்றாள்.
இன்றுமெம் தாயைச் சிறைபிடிப்பேனென்று
பக்கத்துவீட்டுக்காரன் படைநடத்தி வருகின்றான்.
வீரமாதேவியுடன் விளையாட நினைத்துத்
தேரெடுத்து வருகின்றனர் சிறுவர்கள்.
கைவளையல்களைக் கழட்டி வைத்துவிட்டு
பண்டாரவன்னியனின் வாளெடுத்து நிற்கின்றாள் பத்தினி.
பக்கத்துணையாகப் பல்லாயிரம் வீரர்கள்.
இன்னும் கொஞ்சம் ஆட்பலம் வேண்டுமென்று
களத்திலிருந்து வந்துள்ளது கடைசிச்செய்தி.
உங்கள் வரவையும் எதிர்பார்த்திருக்கின்றாள்
தாயவள்.
கவசம் பூண்டெழுக தாயின் வேர்களே.
பனங்காமமண்ணை நெற்றியிலிட்டு
வணங்காமண்ணே எழுக.
எடுத்துவைக்கும் காலடி ஒவ்வொன்றுக்குள்ளும்
எதிரிக்குப் புதைகுழிவெட்டிப் புதைப்போம்.
ஈரம்வற்றாத வீரமண்ணின் தளிர்களே!
பணியோமெனப் பகைக்குணர்த்தும் தருணமிது.
தலைகுனிவாளா தாய்?
இல்லையெனக் கொதிப்புறுக இளையகுருதியே.



www.eelamview.com